ஈரோடு வடக்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத்தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம்" தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட வி.பி.சண்முகசுந்தரம் மறைவெய்திய காரணத்தால்:

ஈரோடு வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024 அக்டோபர் 3 (வியாழக்கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய / நகர / பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ. 1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தி.மு.க. 15 ஆவது பொதுத் தேர்தல்

# ஈரோடு வடக்கு மாவட்டம், ஒன்றியக் கழகப் பொருளாளர் மற்றும் மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் - வேட்புமனுத் தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ச.பொன்மேன் நம்பியூர் ஒன்றியப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.ஏ.பொன்னுச்சாமி மற்றும் பவானி வடக்கு ஒன்றியத்தின் மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.பி.பாலு ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியப் பொருளாளர் - நம்பியூர் ஒன்றிய பொருளாளர் மற்றும் பவானி வடக்கு ஒன்றியம் மாவட்டப் பிரதிநிதி ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024. அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதி விவரம்**

ஒன்றியக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்பு மனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த ஒன்றியத்திற்கு கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச் செயலாளராகவோ, பேரூர்ச் செயலாளராகவோ, ஒன்றியப் பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தி.மு.க. 15 ஆவது பொதுத் தேர்தல்

# ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத் தலைவர் மற்றும் துணைச் செயலாளர் (பொது) ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் வேட்பு மனு தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜி.மணி துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட பி.மெய்யழகன் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவர் மற்றும் துணைச் செயலாளர் (பொது) ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024. அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதி விவரம்**

நகரக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்புமனுக் களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த நகரத்திற்குட்பட்ட வார்டு களில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு செயலாளராகவோ, பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

கொலம்பியாவில்

## ஹெலிகாப்டர் விபத்து!

கொலம்பியா, அக்.1 –

வெனிசுலா நாட்டு எல்லையையொட்டிய பகுதியில், கொலம்பியா நாட்டை சேர்ந்த ராணுவ வீரர்கள் 8 பேர் ஹெலிகாப்டர் ஒன்றில் நிவாரண பணி ஒன்றை மேற்கொள்வதற்காக புறப்பட்டு சென்றனர்.

அப்போது அந்த ஹெலிகாப்டர் குமரிபோ என்ற நகராட்சிக்கு உட்பட்ட கிராம பகுதியில் திடீரென விபத்தில் சிக்கியது. இதில், ஹெலிகாப்டரில் பயணித்த ஒருவரும் தப்பவில்லை.

இந்த விபத்தில், ராணுவ வீரர்கள் 8 பேரும் உயிரிழந்து உள்ளனர்.

இதனை அந்நாட்டின் ஜனாதிபதி கஸ்டாவோ பெட்ரோ அவருடைய எக்ஸ் சமூக ஊடக பதிவில் பகிர்ந்து உள்ளார். எனினும், விபத்து எப்போது நடந்தது போன்ற விவரங்களை வெளியிடவில்லை.



துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றதை வரவேற்று திருவாரூர் நகரப்பகுதிகளிலும், கொரடாச்சேரி பகுதிகளிலும் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் படங்களுக்கு மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் இருந்தனர்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி செயல் வீரர்கள் கூட்டம் !

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.- அமுலு விஜயன் எம்.எல்.ஏ. - ப.சேகர் சிறப்புரை !

*செஞ்சி, அக்.1-*

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக மகளிர் அணி செயல் வீரர்கள் கூட்டம்செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் இன்று (1.10.2024செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் நடைபெறுகிறது. விழுப்புரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி ஜெயக்குமார் தலைமை தாங்குகிறார்.மாவட்ட மகளிர்தொண்டரணி அமைப்பாளர் சிவகாமி சங்கர் அனைவரையும் வரவேற்கிறார்.மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் விஜயா ராமலிங்கம், புஷ்பாசேகர், பரிதா அன்வர் பாஷா, லதா ரமேஷ், ஜெயந்தி நடேசன், சுதா பச்சையம்மாள் பாஸ்கரன், சாந்தி கோவிந்தன், ஷாகின் இப்ராஹிம், ஏக வள்ளி ஏகாம்பரம், செந்தாமரைகூத்தன், ரதி பாலசுப்பிரமணியன்,அமுதா ஆறுமுகம், அய்யம்மாள் சாமி தேவர், ஜெயாசேகர், ஸ்ரீதேவி செல்வ கணேசன் மூர்த்தி, மங்கவாரத்தால் காளிதாஸ்,அரசி பூமகன் சுகாதினி ரமேஷ்ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்த தலைவர் செஞ்சி மஸ்தான், மாநில மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம். எல்.ஏ.மாநில மகளிர் பிரச்சார குழு செயலாளர் அமுலு விஜியன் எம். எல். ஏ.விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி,சேதுநாதன்,சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்நெடுஞ்செழியன், சீனி சின்னசாமி, மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ், வீடுர் ரவி, கதிரேசன், பாலகிருஷ்ணன், சாந்தி ஏழுமலை, ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், ராஜாராமன், அண்ணாதுரை, தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி, விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்பிரமணி, நாராயணமூர்த்தி, திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், செஞ்சி நகர செயலாளர் கார்த்தி, அனந்தபுரம்நகர செயலாளர் சம்பத், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், ஒன்றிய பெருந்தலைவர்கள் மேல்மலையனூர் கண்மணி நெறிஞ்செழியன், மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், திண்டிவனம் நகரமன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், அனந்தபுரம்பேரூர் தலைவர் முருகன், மரக்காணம்பேரூர் தலைவர்வேத நாயகி ஆள வந்தார், மாவட்ட அணி அமைப்பாளர்கள்ஆனந்த், பிரசன்னா, அன்சாரி, ராஜ சக்தி, கோபிநாத், திருமலை, கோ தமிழரசன், சக்தி பிரியன், சந்திரன், கி.செந்தில்குமார், ரகுபதி, ஏ.தங்கராஜ், எஸ். செந்தில் முருகன், கோ. தமிழரசன், விஜயராகவன், அண்ணாதுரை, ப.செந்தில் குமார், ராஜா, காதர் நவாஸ், ரவிச்சந்திரன், ரோமியோன்மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, செல்வி ராம சரவணன், அகிலா பார்த்திபன், அன்பு செழியன், சசிகலா மோகனசுந்தரமம்,மகேஸ்வரி குமரேசன், விஜயன், மனோ சித்ரா ராஜேஸ்வரன், எழிலரசி ஏழுமலை, புஷ்பவள்ளி குப்புராஜ், ஒன்றிய குழு துணை தலைவர் மற்றும் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர்கள் ஜெயபாலன், விஜயலட்சுமி முருகன், மலர்விழி அண்ணாதுரை, புனிதா ராமஜெயம், ராஜலட்சுமி செயல் மணி, அமுதா கல்யாண் குமார், பலராமன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் பூவழகி விஜயன் நன்றி கூறுகிறார்.

துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து!

# திருவாரூர் மாவட்டம் முழுவதும் கழகத்தினர் இனிப்பு வழங்கினர்!

*திருவாரூர், அக்.1-*

தமிழ்நாடு அரசின் துணைமுதல்வராக பொறுப்பேற்றிருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திருவாரூர் மாவட்டம் முழுவதும் கழகத்தினர் வாழ்த்து தெரிவித்து வருவதோடு, பொதுமக்களுக்கு இனிப்புக்கள் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திவருகின்றனர். திருவாரூர் பழைய பேருந்து நிலையம் அருகே மாவட்டசெயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் நல்லாட்சியை மேலும் சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் துணைமுதல்வராக பொறுப்பேற்றிருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திருவாரூர் மாவட்டம் முழுவதும் கழகத்தினர் வாழ்த்துக்களை தெரிவித்து பொதுமக்களுக்கு இனிப்புக்கள் வழங்கி கொண்டாடினர்.

திருவாரூர் நகரப்பகுதிகளிலும், கொரடாச்சேரி பகுதிகளிலும் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் படங்களுக்கு மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன், கோ.செல்வம் மற்றும் டி.செந்தில், செல்வ.ஜெயதேவன், ஆர். முருகேசன் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் அந்தந்த பகுதிகளில் மக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

மேலும் மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம். ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், மு.வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பர சன், கோ.தெட்சிணா மூர்த்தி, ஆர்.பாலச்சந்திரன், சேகர்.கலியபெருமாள், எஸ்.ஜோதிராமன், ப.பிரபாகரன், நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், டி.எஸ். டி.முத்துவேல், சித்தேரி சிவா, ஐ.வி.குமரேசன், வீ. எஸ்.ஆர். தேவதாஸ், பால. ஞானவேல், இரா.மனோகரன், ப.பிரகாஷ், புலிவலம் ஏ.தேவா, வே.மனோகரன், கேப்டன் செல்வராஜ், நகர செயலாளர்கள் வீரா.கணேசன், ஆர்.எஸ்.பாண்டியன், வாரை.எஸ்.பிரகாஷ், எம். எஸ்.கார்த்திக், கூத்தாநல்லூர் பக்கிரிசாமி, ஆர். ராஜசேகர், பா.சிவநேசன், ஏ.கே.டி.சேரன், நன்னிலம் பக்கிரிசாமி, பூண்டி.கே. கலைவேந்தன் உள்ளிட்டோர் தலைமையிலும், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா. இளையராஜா மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார் மற்றும் இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் தலைமையிலும், ஒன்றியக்குழு தலைவர் உமாப்ரியா, நகர்மன்ற தலைவர்கள் மன்னை.த. சோழராஜன் புவனப்ரியா செந்தில், கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா, மும்தாஜ் நவாஸ்கான், மகா லெட்சுமிமுருகேசன், முருகேசன் பக்கிரிசாமி உள்ளிட்டோர் தலைமையிலும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் துணைமுதல்வராக பொறுப்பேற்றிருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து திருவாரூர் மாவட்டம் முழவதும் பொதுமக்களும் கழகத்தினரும் உற்சாகத்தில் மிதந்து வருவது குறிப்பிடத்தக்கது.



துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதை வரவேற்று செஞ்சி ஒன்றிய, நகர தி.மு.க. சார்பில் செஞ்சி கூட்டு ரோட்டில் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் தலைமையில் தி.மு.க.வினர் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். உடன் நகர செயலாளர் கார்த்திக் உள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.என். சுப்பிரமணியன்

அக்டோபர் 1 (2015)



**1956ஆம் ஆண்டில் கழக உறுப்பினராகி கழகப் பணியாற்ற துவங்கினார்.**

**25 ஆண்டுகள் தொடர்ந்து ஆற்காடு நகரச் செயலாளராகவும், 8 ஆண்டுகள் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றினவர். அத்தோடு, பத்து ஆண்டுகள் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.